REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

திராவிட தினஇதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: ஆனி 28உ வெள்ளி (12—7—57) ★ ★ வெளியூர்: ஆனி 29உ சனி (13—7—57) [இதழ் 23

கம்யூனிஸ்டு நாடுகளின் 'ஒற்றுமை' குருஷ்சேவ் கருத்து

பிரேக், ஜூலை 10—

"ஏகாதிபத்தியம் நீடிக்கும் வரையில் யுத்த பயமும் நீடிக்கத்தான் செய்யும்; எனவே கம்யூனிஸ்டு நாடுகளிடை ஒற்றுமை மிக அவசியமாகிறது.

"ஏகாதிபத்தியவாதிகள் ஐரோப்பாவை ஒன்றுக்கு ஒன்று எதிரான இரண்டு இராணுவ முகாம்களாகப் பிளவுபடுத்திவிட்டார்கள்; அத்துடன் நம்மை (கம்யூனிஸ்டு நாடுகளை) பிளவு

(4-ம் பக்கம் பார்க்க)

'இந்த நாடு திராவிட நாடு; எங்கள் பண்பாடு திராவிடப் பண்பாடு'

'தென்னாட்டு மாநிலங்கள் நான்கும் ஒரே கலாச்சாரத்தைகொண்டவையே'

'அவற்றின் பழக்கவழக்கங்களும் ஒன்றே'

டெல்லி மந்திரிக்கு சென்னை நகர மன்றத் தலைவர் அறிவுறுத்தல்

சென்னை, ஜூலை 11—

'இந்த நாடு திராவிட நாடு; எங்கள் பண்பாடு திராவிடப் பண்பாடு,' என்ற உண்மையை மத்திய உள்நாட்டமைச்சர் பண்டித பந்திற்கு சென்னை நகர மன்றத் தலைவர் சீனிவாசன் உணர்த்தியிருக்கிறார், அவருக்கு நகரசபை சார்பில் வரவேற்பளிக்கையில்!

பதிலளித்த பண்டித பந்த் அவர்களும், 'நான் சென்னையின் கலாச்சாரத்திற்குத்தான் எப்போதும் அதிக மதிப்பளிப்பவன்; அந்தக் கலாச்சாரம் திராவிட கலாச்சாரம். அந்த திராவிட கலாச்சாரம், ஆரிய கலாச்சாரத்திலிருந்து வேறுபட்ட ஒன்று என்றால், அந்த கலாச்சாரத்திற்கு நான் தலைவணங்குகிறேன்' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

தென் மண்டலக் குழுவினைத் துவக்கிவைப்பதற்காக வந்த மத்திய உள்நாட்டு மந்திரி பண்டித பந்திற்கும், குழுவில் கலந்துகொள்ளவந்த கேரளா—ஆந்திரா—மைசூர் முதல்வர்களுக்கும், இன்று சென்னை நகரசபை சார்பில் ஒரு வரவேற்பளிக்கப்பட்டது.

அவர்களை வரவேற்றுப் பேசுகையில் மேயர் திரு. கே. என். சீனிவாசன் அவர்கள் குறிப்பிட்டதாவது:—

"தென் மண்டலக் குழுவில் உள்ள மூன்று மாநிலங்களின் பெரும்பகுதி, முன்னைய சென்னை மாநிலமாக இருந்தவைதான்.

"இந்த மூன்று மாநிலங்களும், இப்போது மேற்கு மண்டலத்தில் இணைக்கப்பட்டிருக்கும் மைசூரும் ஆக, நான்கு தென்னாட்டு மாநிலங்களும் ஒரே கலாச்சாரப் பகுதியாகும்; அந்த மாநிலங்கள் திராவிட கலாச்சாரமுடையவையாகும். இந்த திராவிட கலாச்சாரம் வழங்கும் மாநிலங்களின் முதல்வர்களை வரவேற்பதில் நான் பெருமைப்படுகிறேன்.

"திராவிட நாடான இந்த நாடு, கோயில்கள் நிறைந்தது; சங்கரர், இராமானுசர், மத்வாச்சாரியார், பாஸ்கரர் போன்ற ஆச்சாரியர்கள் பிறந்த நாடு; ஆள்வார்களும் நாயன்மார்களும் தோன்றிய நாடு.

"தென்னாட்டு மாநிலங்கள் நான்கிலும் ஒரே வகையானபழக்க வழக்கங்கள்தான் நிலவுகின்றன."

பதிலளித்த பண்டித பந்த் குறிப்பிட்டதாவது:—

"சென்னை, எவரும் பெருமைப்படக்கூடிய ஒரு கலாச்சாரம் பாரம்பரியம், சமாதானப் பிரியம் இவற்றைப் பெற்றிருக்கிறது.

"நகர சபைத் தலைவர் பேசும்போது, இந்த நாட்டின் பாரம்பரியம், கலாச்சாரம் பற்றிக் குறிப்பிட்டார்.

"இந்தியாவில் வேறெங்கும் நிலவும் கலாச்சாரத்தினைவிட இந்த சென்னையின் கலாச்சாரத்திற்குத்தான் நான், அதிகமான முக்கியத்துவமும், மதிப்பும் தருகிறேன். சென்னையின் கலாச்சாரம் திராவிட கலாச்சாரம். அது, ஆரிய கலாச்சாரத்திலிருந்து வேறுபட்ட ஒன்று என்றால், அந்த திராவிட கலாச்சாரத்திற்கு நான் தலைவணங்குகிறேன்."

இரயில்வே அபிவிருத்திக்கு 9-கோடி டாலர்!

உலக பாங்கி கடனாக உதவுமாம்

இந்த ஆண்டில், இந்திய இரயில்வேக்களின் அபிவிருத்தித் திட்டங்களுக்காக 9 கோடி டாலர் (சுமார் 40½ கோடி) வரை கடன் தந்து உதவ உலக பாங்கி ஒப்புக்கொண்டிருக்கிறதாகத் தெரியவருகிறது.

இன்னும் இரண்டொரு நாட்களில் இதற்கான ஒப்பந்தம் ஒன்று வாஷிங்டனில் கையெழுத்தாகும் என்று தெரியவருகிறது.

தமிழ்நாட்டிற்குக் கோதாவரி நீர்

'மண்டல சபை கவனிக்குமா?'

சட்டசபையில் க. அன்பழகன் கேள்வி

சென்னை, ஜூலை 11—

தென் மண்டலக் குழு இந்த வருடம் சென்னையில் கூடுகிறதென்றும், இதில் விவாதிக்க வேண்டிய பிரச்சினைகள் பற்றி மத்திய உள்நாட்டு அமைச்சரின் அனுமதியின்றி வெளியிடமுடியாது என்றும், இந்தக் கூட்டத்துக்காகும் செலவை மாநில சர்க்கார் ஏற்றுக்கொள்ள வேண்டியதில்லை என்றும் நிதி அமைச்சர் சி. சுப்பிரமணியம் இன்று சட்டசபையில் தெரிவித்தார்.

க. அன்பழகன்:—"தமிழ் நாட்டின் பிற்போக்கான நிலைமையை எடுத்துக்கூறி, அதன் செழுமைக்காக கோதாவரி—கிருஷ்ணா தண்ணீரும், மேற்கு கடற்கரைப் பிரதேச ஆறுகளின் தண்ணீரும் கிடைக்கச் செய்யுமாறு நிதி மந்திரி வற்புறுத்துவாரா?"

அமைச்சர்:—"ஆந்திரம், கேரளம் ஆகியவற்றின் உபரிஜலத்தை எவ்வாறு பயன்படுத்துவது என்பது பற்றி குழுவின் முதல் கூட்டத்தில் விவாதிப்பதற்கில்லை; பிறகு நடைபெறக்கூடிய கூட்டங்களில்தான் இதுபற்றி விவாதிக்கக்கூடும்."

எம். செல்வராஜ்:—"மண்டலக் குழுவின் கூட்டத்தில் பொது கால்வாய் போக்குவரத்து போர்டு அமைப்பது பற்றி விவாதிக்கப்படுமா?"

அமைச்சர்:—"இது பற்றி உறுப்பினர் ஏதேனும் உருப்படியான யோசனையைத் தெரிவித்தால் சர்க்கார் அதைப் பரிசீலனை செய்யத் தயாராக இருக்கும்."

க. அன்பழகன்:—"இந்த மண்டலக் குழு தென் பகுதியில் உள்ள நான்காவது மாநிலத்தையும் (மைசூரை) சேர்த்துக் கொள்ளவேண்டிய அவசியத்தை சர்க்கார் வற்புறுத்துமா? மைசூரும் இந்தக் குழுவில் இருக்கவேண்டியது நியாயந்தானே?"

அமைச்சர்:—"இந்த விஷயமும் பரிசீலனை செய்யப்படும்."

மாரியம்மனும் மடமையும்

அறிவுரைகள் தந்து தோழர்கள் சாட்டை

சென்னை, ஜூலை 10—

"அம்மை நோயின் காரணமாக சேலம் மாவட்டத்தில் 168 பேரும் கோவை மாவட்டத்தில் 153 பேரும் மாணமடைந்துள்ளனர்"

என்று சட்டசபையில் அமைச்சர் அறிவித்தார்.

ஏ. கோவிந்தசாமி:— "அம்மை நோய்க்கும் மாரியம்மனுக்கும் காரணமுண்டா? அரசாங்கத்திற்கு அதில் நம்பிக்கை உண்டா?"

அமைச்சர்:—'பலர் பல புதுக் கருத்துக்களை — கொள்கைகளைக் கையாண்டு வருகின்றனர்.'

க. அன்பழகன்:—"அம்மை நோய்க்கு தெய்வத்தின் சாபமே காரணம் என்ற மடைமை எண்ணம் மக்கள் மத்தியில் உள்ளது என்பது அமைச்சருக்குத் தெரியுமா?"

அமைச்சர் இக்கேள்விக்கு நேரடியான பதில் தாராமல், சம்பந்தமில்லாத முறையில், 'மடமை எல்லாத் துறையிலும் நிலவுகிறது' என்று பதிலளித்துவிட்டார்.

பிற்பட்டவர்களை அவமதிப்பதேன்?

மதிப்புக் கொடுத்தால் என்ன?

அமைச்சர் சுப்பிரமணியத்திற்கு மு. கருணாநிதி கேள்விக் கணைகள்

சென்னை, ஜூலை 11—

மிகவும் பின்தங்கிய வகுப்பினர் என்று 58 பிற்போக்கு வகுப்பினரைக் குறிப்பிட்டு, 'இவர்களுக்கு, தாழ்த்தப்பட்டவர்களுக்குத் தரப்படும் கல்விச் சலுகைகள் தரப்படுகிறது,' என்று அமைச்சர் கக்கன் சட்டசபையில் தெரிவித்தார்.

அந்தப் பட்டியலில் வண்ணான், சாணான், என்று 'ன்' போடப்பட்டு சட்டசபையில் படிக்கப்பட்டபோது, அத்தொடர்பு அவர்களை பாதிப்பதாகவும், கௌரவக் குறைவாகவும் காணப்பட்டதைக் கண்டு கழக உறுப்பினரும், கட்சிக் 'கொரடா'வுமான தோழர் மு. கருணாநிதி அவர்கள் குறுக்கிட்டுப் பின்வரும் கேள்வியை எழுப்பினார்:—

'மிகப் பின்தங்கியவர்கள் பட்டியலிலுள்ள பெயர்களில் 'ன்,' என்று இருப்பதற்குப் பதிலாக 'ர்' என்று போட்டால் அவர்களுக்கு மதிப்பு தருவதாகாது?"

அமைச்சர் கக்கன்:—'மத்திய அரசாங்கம் தயாரித்தபடியே இந்தப் பட்டியல் உள்ளது,'

பின் தங்கியவர்கள் முன்னேற்றத்தில் காங்கிரஸ் கொண்டுள்ள கொள்கை அம்பலமாவதை உணர்ந்த நிதி அமைச்சர், தானே முன்வந்து தொடர்ந்து விளக்கம் தந்தார்.

"இதில், 'ன்' என்றிருப்பதால் மதிப்பு ஒன்றும் குறைந்து விடாது; 'ர்' என்றிருந்தால் அவர்களுடைய மதிப்பு உயர்ந்து விடாது."

உடனே மு. கருணாநிதி அவர்கள், அதே பட்டியலில் இசை வேளாளர், மருத்துவர், என்று குறிக்கப்பட்டுள்ளதைச் சுட்டிக்காட்டி, 'அரசாங்கம் எல்லோரையும் மதித்து நடக்க வேண்டும்,' என்று அறிவுரை கூறினார்.

ஆனால் அமைச்சர் சுப்பிரமணியம், தன் இயல்புக் கேற்றபடி, எப்போதும்போல இக்கோரிக்கையையும் ஏற்க மறுத்து, மக்களிடையே வழங்கி வருவதைத்தான் அரசாங்கம் பின்பற்றுகிறது,' என்று கூறினார்.

பாராளுமன்ற உறுப்பினர் ஈ. வெ. கி. சம்பத் டெல்லி பயணம்

டெல்லிப் பாராளுமன்ற (தி. மு. க.) உறுப்பினர் தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் 15—7—57-லிருந்து நடைபெறயிருக்கும் பாராளுமன்றக் கூட்டத்தில் கலந்துகொள்ள 11-7-57 காலை 11 மணிக்கு சென்னையிலிருந்து கிராண்ட்டிரங் எக்ஸ்பிரசில் புறப்பட்டுச் சென்றார்.

துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன், தோழர்கள் இரா. செழியன், பி. ஆர். மாணிக்கம், மற்றும் பல தோழர்கள் சென்ட்ரல் ஸ்டேஷன் சென்றிருந்து வழியனுப்பினர்.

தோழர் சம்பத் அவர்களுடன் அவரது துணைவியார் தோழியர் சுலோசனாசம்பத் அவர்களும் டெல்லி சென்றார்கள்.

வட சென்னையில் தண்ணீர் பஞ்சம்

சட்டசபையில் சத்தியவாணிமுத்து முறையீடு

சென்னை, ஜூலை 11—

"தென் சென்னையைவிட, வட சென்னையில் தண்ணீர் பஞ்சம் அதிகமாக உள்ளது என்பது அரசாங்கத்திற்குத்தெரியுமா?" என்று, சட்டசபையில், கழக உறுப்பினர் தோழியர் சத்தியவாணிமுத்து அவர்கள் கேள்வி ஒன்று எழுப்பினார்.

அமைச்சர் மாணிக்கவேலர், முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைக்க முற்படாவிட்டாலும், வடசென்னை பகுதியில் வாழும் ஏழை குடிமக்களுக்குத் தண்ணீர் பற்றாக்குறையின் காரணமாக ஏற்பட்டு வரும் இன்னல்களை அலட்சியப்படுத்தும் முறையில் கேலியும், கிண்டலும் நிரம்பிய பதில் தந்துள்ளார்.

வடக்கே தண்ணீர் போகாதாம்! தெற்கே தான் வருமாம்! இதைத்தவிர மற்றும் பல காரணங்கள் உண்டாம்!

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 12—7—57 வெள்ளி

சுப்பிரமணியத்தின் சிந்தாகுலம்!

(2)

திராவிட நாட்டு விடுதலைக் கோரிக்கையை பத்தாண்டுக் காலத்துக்கு ஒதுக்கிவைத்து விட்டு, தம்முடன் ஒத்துழைக்க முன்னேற்றக் கழகம் உடன்பட வேண்டும் என்று, நமது கழகத் தலைவர்களுக்கு சட்ட மன்றத்திலிருந்து நிதி அமைச்சர் சுப்பிரமணியம் வெளியிட்டிருந்த வேண்டுகோள் பொருத்தமற்றது—மனத் தூய்மையற்றது என்று முன் எழுதியிருந்தோம். அதிலும் தமிழக மக்களின் வேலையின்மையைப் போக்கவும், வறுமையை விரட்டியடிக்கவும் முன்னேற்றக் கழகம் தனது விடுதலை முழக்கத்தைத் தள்ளிப்போட வேண்டும் என நிதி அமைச்சர் வேண்டிக்கொள்ளுவதில் பொருளே இல்லை என்றும் ஏற்கனவே குறிப்பிட்டிருந்தோம்.

தமது கையாலாகாத்தனத்தையும், தமக்குள்ள வடநாட்டு ஏகாதிபத்திய தாசர் புத்தியை தமிழக மக்கள் கண்களுக்குத் தெரியாமல் மறைத்துக்கொள்ளவுமே நிதி அமைச்சர் மேற்கண்டவாறு முன்னேற்றக் கழகத்தைக் கோரத் துணிந்திருக்கிறார் என்றும் அதில் காட்டி இருந்தோம். மேலும் அது பற்றியே ஆராய்வோம்.

தமிழகத்தின் எதிர்கால தொழில் வளர்ச்சியைக் கருதியாவது திராவிட நாட்டுக் கோரிக்கையை பத்தாண்டுக் காலத்திற்கு ஒதுக்கிவைத்து விட்டு, தம்முடன் ஒத்துழைக்க முன்னேற்றக் கழகம் உடன்பட வேண்டும் என ஓநாய் உள்ளத்துடன் அதி உருக்கமாகக் கோரும் நிதி அமைச்சர், மேற்படி பிரிவினைக் கோரிக்கை எந்த வகையில் தமிழகத் தொழில் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக இருந்துவந்திருக்கின்றது—இருந்துவருகிறது — இருந்துவரக்கூடும் என்பதைப் புள்ளிவிவரத்துடன் விளக்கி இருக்க வேண்டும். அவ்விளக்கத்தை உறுதி செய்யக்கூடிய வகையில், ஏற்கனவே துவங்கப்பட்டு, பிரிவினை முழக்கம் எழுந்த காரணத்தால் இன்னின்ன தொழில் திட்டங்கள் கைவிடப்பட்டுவிட்டன என்பனவற்றையும் இனவாரியாக நிதி அமைச்சர் சுட்டிக்காட்டி இருக்கவேண்டும்.

ஆனால் நிதி அமைச்சரோ, புள்ளிவிவரத்துடனும் தமது முடிவை வெளிப்படுத்தவில்லை. அதுபோன்றே, அம்முடிவை உறுதிப்படுத்துவதற்கான இடையில் கைவிடப்பட்டுப் போன அரைகுறை தொழில் ஏற்பாடுகளையும் எடுத்தியம்பவில்லை; ஏதோ, 'நான் சொல்லுவதை நம்பித்தான் ஆக வேண்டும்; என் சொல்லுக்கு எதிர் சொல் இருக்க முடியாது—கூடாது' என்ற நினைப்பில் நிதி அமைச்சர் பேசி இருக்கின்றார்.

திராவிட நாட்டு கோரிக்கை, குறிப்பிட்ட நமது நிலப்பரப்பின் சுதந்திர முழக்கமாகும். அந்த விடுதலை முழக்கத்தை, தமிழகத்தின் வாட்டத்தைப் போக்கிக்கொள்ள, வடநாட்டு ஏகாதிபத்தியத்தின் கருணை கடாட்சத்தைப் பெறுவதற்காக தள்ளிப்போட வேண்டும் என நிதி அமைச்சர் வேண்டிக்கொள்வது, தலைக்கேறிப் போயுள்ள அவருடைய தாசர் புத்தியையே காட்டுகின்றது.

சுதந்திரம் சுக்கும் அல்ல; மிளகும் அல்ல. நாட்டு விடுதலை கடைச்சரக்கு அல்ல.

திராவிட நாட்டு விடுதலை, திராவிடத்தின் தொழில் வளத்திற்காக, வடநாட்டு ஏகாதிபத்தியத்திடம் மாற்றிக் கொள்ளக்கூடிய பண்டம் அல்ல—அடகு வைக்கக்கூடிய பொருள் அல்லவே அல்ல.

தமிழக மக்களை வருத்திக் கொண்டிருக்கும் வறுமையையும் வேலையின்மையையும் உடனடியாக ஒழித்துக்கட்ட முடியவில்லையானாலும், கூடுமானவரை மெள்ள மெள்ள ஒழித்துக் கட்டுவதை நிதி அமைச்சர் விரும்புபவராக இருப்பாரானால், அவர் நடந்து கொண்டிருக்க வேண்டிய முறையே வேறு. திராவிட நாட்டு விடுதலை முழக்கத்தைச் சுட்டிக்காட்டி, தமிழகத்திற்கான தொழிற்சலுகைகளை, வடநாட்டு ஏகாதிபத்தியத்திடமிருந்து நிதி அமைச்சர் இதற்குள்ளாகப் பெற்றிருக்க வேண்டும். இம்முறை நூற்றுக்கு நூறும் பலன்தரக் கூடியதுமாகும். இதற்கு வரலாற்றில் நிரம்ப ஆதாரங்களும் உண்டு.

'முன்னேற்றக் கழகத்தின் விடுதலை எழுச்சியை எடுத்துக் கூறி, தமிழகத்தின் வளத்தைப் பெருக்க, வடநாட்டு ஏகாதிபத்தியத்தை இணங்கச் செய்யுங்கள்' என்று நமது கழகப் பெருங் காவலர், சட்ட மன்றத் துவக்கக் கூட்டத்திலேயே நிதி அமைச்சருக்கு வேண்டுகோள் விடுத்திருந்தார். தமிழக மக்களுக்கு நல்வாழ்வு தேடுவதில் அக்கறை கொண்டிருக்கும் எவரும் அப்பொன்னுரையை வரவேற்கத்தான் செய்வர். ஆனால் நிதி அமைச்சரோ, அவ்வரிய கருத்தை எள்ளி நகையாடினார்—'ஏற்கேன்—அதை மனத்தாலும் தீண்டேன்' எனப் பிரதாபம் பேசினார்.

இப்பொழுதும் காலம் கடந்து விடவில்லை. தமது டெல்லி ஆண்டைகளிடம், நமது சுதந்திர முழக்கத்தை உள்ளது உள்ளபடி எடுத்துச் சொல்லி, தமிழக மக்களின் வேலையின்மையையும், வறுமையையும் போக்கக்கூடிய, தமிழகத்துக்குரித்தான தொழில் திட்டங்களைப் பெறுவதில் நிதி அமைச்சர் நாட்டம் செலுத்தவேண்டும். அதில் நிச்சயமாக வெற்றி காண்பார். தமிழ் மக்கள் நல்வாழ்வு பெறுவதில் அவருக்குள்ள பற்றையும் பரிவையும், அதன் மூலம், தமிழ் மக்களால் தெளிவாகத் தெரிந்துகொள்வது சாத்தியமுமாகும்.

இன்று ஏதாவது தொழிற்சலுகைகள், தமிழகத்திற்குக் கிடைத்திருக்குமானால், அவை அனைத்தும் நமது முன்னேற்றக் கழகத்தின் சுதந்திர முழக்கத்தின் காரணமாகவேதான் கிடைத்திருக்கின்றன என்பதை நிதி அமைச்சர் தெரிந்து கொள்ளவேண்டும். அதுவுமன்றி, நிதி அமைச்சரையும், அவருடைய கூட்டுத் தோழர்களையும் டெல்லி ஏகாதிபத்திய வாதிகள், குறைந்த அளவில் மதிப்பதற்கும்கூட, நமது கழகத்தின் விடுதலை எழுச்சிதான் என்பதை நிதி அமைச்சர் புரிந்துகொள்ளவேண்டும்.

திராவிட நாட்டு கோரிக்கையை பத்தாண்டுக் காலத்திற்குக் கைவிட்டுவிட்டால்தான் தமிழகத்தைத் தொழில் மயமாக்க முடியும் என்று நிதி அமைச்சர் சாதிக்கப் பார்க்கின்றார். என்ன பொருள் இதற்கு?

திராவிட நாட்டு கோரிக்கை வற்புறுத்தப்படுகின்ற வரையில் தமிழ்நாட்டின் தொழில் வளம் பெருகப் போவது கிடையாது என்ற முடிவிற்கு வந்தவராக நிதி அமைச்சர் இருக்கின்றார் என்பதை, அவர் பேச்சு விளக்கம் அளிக்கின்றது. அதற்கு நாம் கூறும் சமாதானம் ஒன்று இருக்கிறது.

'வடநாட்டு ஏகாதிபத்தியத்திடம் திராவிடம் இணைந்திருக்கின்ற காலம்வரை, தென்னகம் தொழில் துறையில் முன்னேறப்போவது கிடையவே கிடையாது. எனவே, அத்தோல்வியை மறைத்துக் கொள்ளவும், தமிழ் மக்களைத் தவறான வழியில் செலுத்தவுமே, திராவிட நாட்டுப் பிரிவினை முழக்கத்திற்கும் தமிழகத்தின் தொழில் வளத்திற்கும் நிதி அமைச்சர் முடிச்சுப் போட்டுப் பேச முன்வருகிறார்' என்பதே அந்தச் சமாதானம் ஆகும்.

துணிவுடையவர்கள் தட்டிக் கேட்கும் நிலை இருக்கின்ற பொழுதே, நாடாளும் நிதி அமைச்சர் போன்றவர்களின் முகாரியைக் கேட்டு, அவர்கள் மீது இரக்கம் காட்டி, கேட்டதில் சிறிதளவாவது தர விரும்பாத டெல்லி ஏகாதிபத்தியம், துணிவுடையவர்கள் தட்டிக் கேட்பதை சிறிது காலத்திற்கு நிறுத்திக்கொண்ட பிறகு, தாராளமாக நடந்துகொள்ள முன்வரக்கூடும் என நிதி அமைச்சர் எண்ணுவதும் நம்புவதும் விசித்திரமாகும்.

நமது முன்னேற்றக் கழகத்திற்கு நிதி அமைச்சர் வெளியிட்டுள்ள கோரிக்கையில், நேர்மையுமில்லை—நாணயமுமில்லை—நியாயமுமில்லை. எப்படியாவது முன்னேற்றக் கழகத்தை தமிழ் மக்களிடம் கறைபடுத்திக் காட்ட வேண்டும் என்ற ஒரே ஒரு கெடுநினைப்பில்தான் நிதி அமைச்சர் மேற்படி பொருளற்ற வேண்டுகோளை வெளியிட்டுள்ளார். அதுவே அவருடைய சிந்தாகுலம் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

தெரிந்து கொள்ளுங்கள்!

அஜந்தா குகைகளில் நதித் தோட்டம் ஒன்றை நிர்மாணிப்பதற்காக இந்திய சர்க்கார், பம்பாய் சர்க்காருக்கு ரூ. 10,000 உதவித்தொகை அளித்துள்ளது.

'காட்டு வளம் குன்றியதைக் காட்டி தேவிகுளம், பீர்மேடு பகுதிகளைப் பெற வேண்டும்'

'வன மகோத்சவம் என்ற பெயரால் பணத்தைப் பாழாக்குவதேன்?'

காட்டிலாகா மானியக் கோரிக்கைமீது தோழர்கள் எம்.பி.சுப்பிரமணியம், எம். செல்வராஜ், எஸ்.எம். அண்ணாமலை ஆகியோர் முழக்கம்

சென்னை, ஜூலை 10—

காட்டு இலாகாவின் கீழ் சென்னை அரசாங்கத்திற்கு ரூ. 57,90,600-க்கு மேற்படாத தொகையும், முதலீடு திட்டத்தின் கீழ் ரூ. 19,54,500-ம் அனுமதிக்கும்படி விவசாய இலாகா அமைச்சர் பக்தவத்சலம் இன்று சட்டசபையில் கோரினார்.

வெட்டுப் பிரரேபணையின்மீது கழக உறுப்பினர்கள் நல்ல கருத்துக்களைத் தந்துள்ளனர்; அவர்கள் பேசிய முக்கிய கருத்துக்கள் இங்கு தரப்பட்டுள்ளது.

இறுதியில் வெட்டுப் பிரரேபணை தோல்வியுற்றது; மானியக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டது,

தோழர் எம். பி. சுப்பிரமணியம் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"தமிழ் நாட்டில் காட்டு வளம் மிகவும் குறைவாக உள்ளது என்று கூறுகிறார்கள். மொத்தத்தில் நமது நாட்டில் 13·4 சதவிகிதமே காட்டுவளம் உள்ளது என்று கூறுகிறார்கள். மாநில அமைப்புக்குப் பிறகு இதுதான் நம் மாநிலத்தின் நிலை; அதற்காக நாம் ஒன்றும் செய்ய முடியாது; இயற்கைதான் இதற்குக் காரணம்.

"ஆனால், தேவிகுளம், பீர்மேடு பகுதிகளை நாம் பறிகொடுத்திருப்பதை மீண்டும் பெற, காட்டு வளம் குன்றியிருப்பதையேனும் காரணமாகக் காட்டிப் பெறுவதற்கு அரசாங்கம் முன்வர வேண்டும்.

"மக்கள் கோரிக்கை—என்ற அடிப்படையில், இழந்த தேவிகுளம், பீர்மேடு பகுதிகளை நாம் பெற முடியவில்லை. இந்த அடிப்படையில் இப்போது நமது அரசாங்கம் மீண்டும் வற்புறுத்த வேண்டுகிறேன்.

"காடுகளின் மரத்தை வெட்டுவதற்காகப் பெரிய பணக்காரர்களுக்குப் பெரும்பாலும் குத்தகை விடப்படுகிறது. அவர்கள், தங்களின் குத்தகை விதிகளை மீறி அருகாமையிலும், பக்கங்களிலும் உள்ள நல்ல மரங்களையும் வெட்டிவிடுகிறார்கள்—என்று, பலமுறையும் இந்தச் சபையின் கவனத்திற்கு நான் கொண்டுவந்திருக்கிறேன். ஆனால் அரசாங்கம் இதைப் பற்றி அக்கறை எடுத்துக்கொண்டு நிலைமையை சீர்படுத்தியதாகத் தெரியவில்லை. இதையே மீண்டும் சபையின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். எதிர்காலத்தில் இது பற்றி அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்கும் என்று நம்புகிறேன்.

"முன்பு, பஞ்சாயத்துகளின் நிர்வாகத்தின்கீழ் இருந்த காடுகளை இப்போது அரசாங்கம் கைப்பற்றியுள்ளது. இந்தக் காடுகளின் வளம் அரசாங்கத்தின் கைக்கு மாறியதும் குன்றிவிடத் துவங்கியுள்ளது. இதற்கு என்ன காரணம்? பஞ்சாயத்துகள் நடத்திய போது இருந்ததைவிட நல்ல முன்னேற்றமல்லவா நியாயப்படி அரசாங்கம் எடுத்துக்கொண்ட பிறகு ஏற்பட்டிருக்க வேண்டும்? ஏன் ஏற்படவில்லை?

"பச்சை மரங்கள் வெட்டப்படுவதும், அனுமதியின்றி விறகு வெட்டப்படுவதும், திருட்டுகள் அதிகரிப்பதும், நிர்வாகமுறை சரியில்லை என்பதைத்தானே எடுத்துக்காட்டுகிறது என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

"அதிகாரிகளின் கவனக்குறைவும், அஜாக்கிரதையும், யாருக்கும் தெரியாமல் அனுமதி தருவதும், நல்ல பராமரிப்பு இல்லாததும் இக்குறைகளுக்குக் காரணமாகும். அவர்களுக்குத் தரப்படுகின்ற ஊதியம் மிகமிகக் குறைவு! மாதம் ரூ. 20-கூட ஊதியமாகத் தரப்படுகிறது. இதனால் அவர்கள் தங்கள் கடமையை மறந்து தவறான வழிகளில் செல்ல முனைகின்றனர். எனவே, காட்டு இலாகாவில் வேலை செய்பவர்களின் ஊதியத்தை உயர்த்த வேண்டும்; அப்போதுதான் அவர்கள் தவறான வழிகளில் செல்லமாட்டார்கள்.

"ஆண்டுதோறும் புதிய மரங்கள் நடுகிறார்கள் என்று கூறப்படுகிறது; ஆனால், அரசாங்கத்தின் சென்ற ஆண்டு தணிக்கை அறிக்கையைப் பார்க்கும்போது, இதற்காக ஒதுக்கப்பட்ட பணம் முழுவதும் செலவிடப்படவில்லை என்று தெரிகிறது. இந்த ஆண்டிலாவது உரிய காலத்தில் நல்ல முறையில் முழுத் தொகையும் செலவிடப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

"சேலத்தில் ஆயிரக்கணக்கான ரூபாய்கள் செலவிட்டு சவுக்கு மரங்களை நட்டனர்; ஆனால் 3, 4 ஆண்டுகளில் அந்த மரங்கள் தானாகவே அழிந்து விட்டன. எனவே, கோவையில் ஏற்படுத்தப்பட்டுள்ள ஆராய்ச்சி நிலையத்துடன் ஆலோசனை செய்து, மண்வளம், காலநிலை முதலியவற்றை கண்டறிந்து தக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

"காட்டுப் பகுதிகளில் வாழும் மக்கள் அப்புறப்படுத்தப்படுகின்றனர்; இது கூடாது. அவர்

(4-ம் பக்கம் பார்க்க)

சுமார் ஆறரை இலட்சம் டன் உணவு பொருள்

ஆகஸ்டுக்குள் இறக்குமதியாகும்

புதுடில்லி, ஜூலை 10—

இந்த ஜூலை, ஆகஸ்டு திங்கள்களில் அமெரிக்கா, பர்மா, மற்றுமுள்ள நாடுகளிலிருந்து மொத்தமாக 5,52,052 டன் கோதுமையும், 1,00,881 டன் அரிசியும் இறக்குமதியாகும் என்று தெரியவருகிறது.

இந்தக் கோதுமையையும், அரிசியையும் ஏற்றிக்கொண்டு 43 கப்பல்கள் இந்தியாவில் உள்ள பல துறைமுகங்களுக்கும் வந்து கொண்டிருக்கின்றன என்றும் கூறப்படுகிறது.

பல நோக்குப் பள்ளிகள் திட்டத்தில் மாறுதல்

புதுடில்லி, ஜூலை 10—

இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில் விவசாயப் பயிற்சியுடன் கூடிய 200 பலநோக்குப் பள்ளிகள் ஏற்படுத்துவதற்கு உருவாக்கப்பட்ட திட்டத்தில் சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளது.

திருத்தி அமைத்துள்ள திட்டத்தின்கீழ் 100 விவசாயப் பயிற்சிப் பள்ளிகளும், 38 விஞ்ஞானப் பயிற்சிப் பள்ளிகளும் ஏற்படுத்தப்படுமாம்.

இதற்காக கல்வி இலாகா ஒரு கோடி ரூபாய் முன்பு ஒதுக்கியதை மாற்றியமைக்கக்கூடுமாம்.

1957—58-ம் ஆண்டில் ரூ. 10 இலட்சம் மட்டுமே செலவிட்டு எல்லா மாநிலங்களிலும் திட்டம் அமுல் செய்யப்படுமாம்.

‘மடாலய நிலங்கள் ஏழை மக்களுக்குப் பயன்பட மாநில சர்க்கார் முயற்சிக்க வேண்டும்’

சட்டசபையில் ஏ. கோவிந்தசாமி கோரிக்கை

சென்னை சட்ட மன்றத்தில் நிலவரித் துறை மானிய வெட்டுப் பிரரேபணையின்மீது தோழர் ஏ. கோவிந்தசாமி அவர்கள் ஆற்றிய உரையின் முழு விவரம் இங்கு தரப்படுகிறது :—

“நம் நாட்டின் உணவுப் பிரச்சினை தீரவேண்டுமானல், நிலச் சீர்திருத்தச் சட்டம் வரவேண்டுமென்பதை அரசாங்கமே ஒத்துக்கொண்டுதான் இருக்கிறது. இதற்குச் சான்ருக நிலச் சீர்திருத்தம் வந்த காஷ்மீரிலும், சைனுவிலும் நல்ல நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அந்த முறையில் நம் அரசாங்கம், ‘நிலச் சீர்திருத்தச் சட்டம்’ ‘கொண்டு வருகிறோம் — கொண்டு வருகிறோம்,’ என்று சொல்வதானது, ‘நிலச்சுவான்தாரர்களே உஷாராக இருங்கள்’ என்று எச்சரிக்கும் நிலைமைதான் ஏற்படுகிறது.

“சென்ற ஆண்டில் அமைச்சரவர்கள் ‘நிலச் சீர்திருத்தச் சட்டம் ஒரு நாள் புலிபோல வரும்’ என்ற உறுதி கூறினர். பிறகு, ‘நிலச் சீர்திருத்தச் சட்டத்தைப் படிப்படியாகக் கொண்டு வரப் போகிறோம்’ என்று கூறினர்.

“‘பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம்’ ‘நியாயவாரச் சட்டம்’ என்று, நிலத்திலிருந்து பாதுகாப்பு அளிக்கிற முறையில் சட்டங்களைக் கொண்டு வந்தார்கள் மூன்ருவதாக, நிலவுடமைக்கு வரம்பு கட்டுகிற சட்டத்தைக் கொண்டுவர ஏன் தயங்குகிறார்கள் என்று புரியவில்லை? ‘கொண்டு வருகிறோம்’ என்று சொன்ன அளவில், தஞ்சையிலுள்ள நிலப்பிரபுக்கள் சீறி எழுந்தனர்; மாநாடு கூட்டினர்; பின்னர், தேர்தல் காலத்தில் ஒரு கட்சியாக மாறினர்; இருந்தாலும், அந்தக் கட்சி வெற்றி பெருததற்குக் காரணம், பொதுமக்கள் அவர்கள் கொள்கையை விரும்பி ஏற்றுக் கொள்ளவில்லை என்பதை ஆட்சியாளர்கள் நன்கு உணர வேண்டும்.

“நேற்று கூட அமைச்சர் கக்கன் சொன்னர் — ‘நிலச்சுவான்தார்கள் எதிர்க்கிருர்கள்’ என்ற காரணத்தினல்தான் பயப்படுகிறோம்’—என்று! ஆளும் கட்சியில் பல பேரும், எங்கள் தரப்பிலே ஒரு சிலரும் இருந்தாலும் கூட, ‘இது பொதுமக்களுக்கு நன்மைதருமா?’ என்பது பரிசீலிக்கும் நிலையில், ‘பொதுவாக நன்மை இருக்கிறது,’ என்றுதான் சொல்லவேண்டும். நிலவுடைமைக்கு வரம்பு கட்டும் இந்தச் சட்டத்தை உடனடியாகக் கொண்டுவர ஆவனசெய்ய வேண்டும்.

“தஞ்சை பண்ணையாள் சட்டத்தைக் கொண்டுவந்ததற்காக ஆச்சாரியாரைப் பாராட்டினர்கள். நிலச சீர்திருத்தச் சட்டத்தை விரைவில் கொண்டு வந்து மக்களின் பாராட்டுதலை அமைச்சர் பெறவேண்டும். இந்த நிலையில், ‘அகில இந்திய ரீதியில் சட்டம் கொண்டுவரப்படும்’ என்று சொல்லப்படுகிறது; மத்திய சர்க்கார் காலம் கடத்தும் நிலையே இதுவாகும். நிலத்தில் வருகின்ற வருமானத்திற்கு வரி போடுகின்ற நிலையில் நிலவரம்பு போடுவதா—வேண்டாமா என்று முடிவுக்கு வராமல் காலம் கடத்துவதால் பிரயோசனமே கிடையாது.

“இரண்டாவதாக, மடாலயங்களுக்குச் சொந்தமான நிலங்களையெல்லாம் அரசாங்க உடைமையாக்கவேண்டும்; இதை நான் மட்டும் சொல்வதாக நினைக்கக் கூடாது; காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சில உறுப்பினர்களும் கூட அவ்வாறு கூறியுள்ளனர். கோயில் சொத்தை (நிலத்தை) இடையிலே இருக்கிற தாரகர்கள் அனுபவிப்பதாக எனக்குப் பின்னல் வீற்றிருக்கிற உறுப்பினர் ஒருவர் சொன்னர்; இம்மாதிரி எவரும் குறுக்கிடாமலிருக்க இவற்றையெல்லாம் அரசாங்கம் ஏற்றுக்கொண்டு, நிலத்தில் உழுகின்ற ஆதிதிராவிட மக்களுக்குக் கூட்டுப்பண்ணைகள் ஏற்படுத்தி அந்நிலங்களில் சாகுபடி செய்ய ஏற்பாடு செய்தால் மக்களுக்கு அதனல் பயன் ஏற்படக்கூடும்.

“ஆண்டவனுக்கும் அதிகம் வேண்டியதில்லை — ஓரளவுதான் வேண்டும். ஆண்டவனும் தன் தேவையை குறுக்கிக்கொள்ள வேண்டும்.

“ஏழை மக்களுக்குப் புறம்போக்கு நிலங்களை ஜாரி செய்தால் உணவு உற்பத்தி பெருக்க முடியுமென்று அரசாங்கம் உணர்ந்தும் அதைச் செய்யாமல் காலங்கடத்தி வருகிறது; அதை உடனடியாகச் செய்யவேண்டும்.

“‘கல்பட்டு’ விஷயத்தில் அமைச்சர் கவனம் செலுத்தினல் அங்குள்ள ஆதிதிராவிட மக்கள் பிரச்சினை நன்ருகத் தீரும். அமைச்சரவர்கள் அங்கு வந்து பார்வையிட்டபின், 60 ஏக்கர் நிலம் அவர்களுக்கு ஒதுக்கித் தருவதாக வாக்குறுதியளித்தார்கள்; ஆனல் 7 அல்லது 8 ஏக்கர் நிலம் தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. மற்ற நிலங்களையும் ஒதுக்கித் தருவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும்.

“நெய்வேலிப் பகுதியில் 22 கிராமங்கள் ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக்கின்றன. 39 கிராமங்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. நில ஆர்ஜிதம் செய்கிறபோது, நிலம் எந்த அளவுக்குப் பெறுமானம் இருந்ததோ அந்த அளவுக்கு ஈடு தொகை கொடுக்காமல், ரூ. 250-தான் கொடுக்கப்படுகிறது. 1947-ல் இருந்த விலை தான் கொடுக்கப்படுகிறது. நில ஆர்ஜிதம் செய்ய வருகிறபோது ஒருவருக்கு 10 ஏக்கர் நிலம் இருந்தால் சில ஏக்கரா எடுத்தும், சிலவற்றை எடுக்காமலும் விட்டுவிடுகிருர்கள். அம்மாதிரி ஆர்ஜிதம் செய்கிறபோது நிலத்தில் வீடு இருந்தால் வீட்டின் மதிப்பு—உதாரணமாக ரூ. 1000 மதிப்பிட்டாலும், வீடு கட்டி 20 ஆண்டுகள் ஆகியிருந்தால் ஒரு ஆண்டுக்கு நூற்றுக்கு ரூ. 4 வீதம் ரூ. 800 கழிவு செய்தால் ரூ. 200 மட்டுமே வருகிறது; இந்த விஷயத்தில் போதுமான கவனம் செலுத்தி, தக்க ஈடு தொகை தருவதற்கு வழிசெய்ய வேண்டும். இன்றைய நில விலையில் 15 சதவிகிதம் அதிகம் கொடுக்க வேண்டும்.

“கிராம உத்தியோகஸ்தர்களுக்கு இப்போது ஓரளவு உயர்வு கொடுக்கப்பட்டிருக்கிறது; அவர்கள் செய்த முயற்சி ஓரளவு வெற்றி பெற்றும் அவர்கள் நடத்திய கிளர்ச்சியின் காரணமாக ஏறக்குறைய 300 பேர் வேலையிலிருந்து ‘சஸ்பெண்ட்’ செய்யப்பட்டிருக்கிருர்கள். அவர்களை உடனடியாக வேலையிலிருந்து நீக்காமலும், நிறுத்திவைக்காமலும் மறுபடியும் வேலை கொடுத்து ஆதரிக்க வேண்டும். இந்தச் சம்பள உயர்வு, அவசியம் என்று உணர்ந்துதான் சம்பளம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, ‘சஸ்பெண்ட்’ செய்தவர்களுக்கு உதவி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், மாணவர்களுக்கு ‘ஸ்காலர் ஷிப்’ வாங்க வேண்டிய பாரத்தில் தாசில்தார் கையெழுத்துப் போடவேண்டியிருக்கிறது. சில தாசில்தார்களிடம் ஏழை மாணவர்கள், ஆதிதிராவிட மாணவர்கள் போய் ‘சர்டிபிகேட்’ கேட்டால் காலம் கடத்துகிருர்கள்; இக்குறை நீக்கப்பட வேண்டும்.”

இந்தோனேஷியாவில் குடியேறி வாழும் அன்னியர்!

சர்க்கார் விசேட வரி விதிக்கிறது

ஜகார்தா, ஜூலை 10—

இந்தோனேஷியாவில் குடியேறியுள்ள அன்னியர்களுக்கு ஒரு விசேட வரி விதிப்பு ஒன்றை அவசரச் சட்டம் ஒன்றின் மூலம் சர்க்கார் பிரகடனம் செய்திருக்கிறதாம்!

இந்த ஆண்டு சனவரி முதல் அமுலுக்குவரும் இந்த வரி விதிப் பின்படி, இந்தோனேஷியாவில் வாழும் ஒவ்வொரு அன்னியரும் தலைக்கு ஆண்டு ஒன்றுக்கு 1,500 ‘ருப்யா’க்கள் (சுமார் ரூ. 700) வரி தரவேண்டும் என்றும், இத்துடன், ஒவ்வொரு குடும்பத் தலைவரும் தனக்காகச் செலுத்தும் இந்த வரியோடு தனது மனைவி, பராமரிப்பில் உள்ள குழந்தைகள் இவற்றிற்காக வரி தரவேண்டும் என்றும் விதிக்கப்பட்டிருக்கிறதாம்.

அன்னிய நாட்டுத் தூதுவர்கள், பார்வையாளர்கள், இந்தோனேஷிய சர்க்காரில் வேலை செய்பவர்கள் எல்லாம் இந்த வரி விதிப்பிலிருந்து விலக்களிக்கப்படுவார்கள் என்றும் சட்டம் கூறுகிறது.

வடாற்காடு மாவட்ட தி. மு. கழகக் கூட்டம்

26-5-57 பிற்பகல் 3 மணிக்கு வ. ஆ. மாவட்ட தி. மு. கழகக் கூட்டம் செயலாளர் முல்லை-சத்தி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் 32 மாவட்டக்குழு உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

செயலாளர் மாவட்டத்தின் நிலைமையை விளக்கிய பின், மாவட்டக்குழு உறுப்பினர் தோழர் வி. ஆர். ஆதிமூலம், வாணியம்பாடி நகர தி. மு. கழகச் செயலாளர் தோழர் ஏ. எல். முனிரத்தினத்தின் தந்தையார் திரு. வி. இலட்சுமணன் அவர்கள், தூத்துக்குடி தோழர் தாளமுத்து ஆகியோர் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும், மாவட்டத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் ப. உ. சண்முகம், மா. பா. சாரதி, அண்ணாமலை, சந்தானம் ஆகியோருக்கும், பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட தோழர் தருமலிங்கம் அவர்களுக்கும் பாராட்டும்—வாழ்த்தும் தெரிவித்தும், தேர்ந்தெடுத்த பொதுமக்களுக்கும்—வெற்றிக்குப் பாடுபட்ட கழகத் தோழர்கள்— ஆதரவாளர்கள் ஆகியோருக்கும் நன்றி தெரிவித்தும், புதியவரிகளைக் கண்டித்தும், குளித்தலையில் நடைபெற்ற சென்ற பொதுக்குழுவின் தீர்மானங்களை ஏற்றுக் கொண்டும், வடாற்காடு மாவட்ட தி. மு. கழக மாநாட்டை திருவண்ணாமலையில்—ஆகஸ்டுத் திங்களில் நடத்துவதென்றும், மாநாட்டிற்கு நிருவாகிகள் தேர்ந்தெடுத்தும், மற்றும் சில பிரச்சினைகளைப்பற்றியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. (ந. கி,)

திருத்தம்

9-6-57 ‘நம் நாடு’ இதழில் 2-ம் பக்கத்தில் வெளியாகியுள்ள தோழர் எஸ். எம். அண்ணாமலை அவர்களின் சட்டசபை சொற்பொழிவில் ‘ஒரு ஏக்கருக்கு ரூ. 351’ என்றிருப்பதை, ‘இரண்டு ஏக்கருக்கு ரூ. 351’ என திருத்தி வாசித்துக்கொள்ள வேண்டுகிறோம். —(ஆ. ம)

டில்லிப் பேரரசின் வரிகளை எதிர்த்து மாபெரும் ஊர்வலம்

சேலம் பாராளுமன்ற உறுப்பினர் ஊரைவிட்டுச் சென்றுவிட்டார்

பொதுக்கூட்டத்தில் டி. கே. சீனிவாசன் கண்டன முழக்கம்

சேலம், ஜூலை 10—

7—7—57 மாலை சேலத்தில், தி. மு. கழகத் தோழர்கள் நகர தி. மு. கழகப் பணிமனையிலிருந்து கழகக் கொடிகளுடன் ஊர்வலமாக நகரின் முக்கிய வீதிகள் வழியாகச் சென்றனர்.

இந்த ஊர்வலத்திற்கு சேலம் மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் ஜி. பி. சோமசுந்தரம் தலைமை தாங்கினர். சேலம் நகர தி. மு. கழக செயலாளர் தோழர் இ. ஆர். கிருஷ்ணன், தோழர் சிற்றுளி ஏ. சுப்பிரமணியம் மற்றும் பலரும் ஊர்வலத்தில் சென்றனர்.

புதிய வரிகளை திரும்பப் பெறுமாறு ஒலி முழக்கம் முழங்கிக்கொண்டு ஊர்வலத்தினர் நகரின் முக்கிய வீதிகள் வழியாகச் சென்று சேலம் பாராளுமன்ற (காங்கிரஸ்) உறுப்பினர் தோழர் எஸ். வி. இராமசாமியின் இல்லத்திற்கு வந்தனர்.

தோழர் எஸ். வி. இராமசாமியும் அவரது குடும்பத்தினரும் இல்லத்தில் இல்லை; இல்லம் பூட்டப்பட்டிருந்தது.

‘தோழர் எஸ். வி. இராமசாமி 6-ந் தேதி இரவு வரை சேலத்தில் இருந்தவர் 7-ந் தேதியன்று சேலத்தில் இல்லை — வெளியூர் சென்று விட்டார்,’ என்று தோழர் எஸ். வி. இராமசாமியின் ஆட்கள் அறிவித்தவுடன், கழகத் தோழர்களுக்கு மிகவும் மன வேதனை ஏற்பட்டது.

‘மக்களின் குறைகளைக்கூட கேட்டறிய சந்தர்ப்பமில்லாத பாராளுமன்ற உறுப்பினராக இருக்கிருரே, தோழர் எஸ். வி. இராமசாமி,’ என்று வேதனைப் பட்டனர்.

மாவட்ட தி. மு. க. செயலாளர் தோழர் ஜி. டி. சோமசுந்தரமும், சேலம் நகர தி. மு. கழகச் செயலாளர் தோழர் இ. ஆர். கிருஷ்ணனும் கையெழுத்திட்டிருந்த விண்ணப்பத்தை தோழர் எஸ். வி. இராமசாமியின் தபால் பெட்டியில் போட்டுவிட்டு பிறகு அமைதியாக ஊர்வலத்தினர் சென்றனர்.

பொதுக் கூட்டத்தில் கண்டனம்

சேலம் குமாரசாமி பட்டியில் தோழர் சி. இரத்தினசாமி தலைமையில், புதிய வரிகளை எதிர்க்க தி. மு. கழகக் கூட்டம் அன்று நடைபெற்றது.

தோழர் ஜி. பி. சோமசுந்தரம் பின்வரும் தீர்மானத்தை முன்மொழிந்தார் :—

“இந்திய அரசியலார் இந்த ஆண்டு வரவு—செலவுத் திட்டத்தின்போது புதியதாக 112 வகையான பொருள்கள் மீது சுமார் ரூ. 93 கோடிக்கு வரி விதித்து இருக்கிருர்கள். இவ் வரிகள் ஏழை—நடுத்தர மக்களைப் பெரிதும் பாதிப்பதாக இருப்பதாலும், அதன் காரணமாகப் பல பொருள்களின் விலை ஏறிவிட்டதாலும், மக்கள் வாங்கும் சக்தி அற்று தவிப்பதாலும், இந்த வரிகளைப் பொதுமக்கள் விரும்பாததாலும், பாராளுமன்றத்தில் மேற்படி வரிகளை எதிர்த்துப் போராடவும் வாக்களிக்கவும் வேண்டும் என இத்தொகுதியின் சார்பில் சென்றுள்ள பாராளுமன்ற உறுப்பினர் எஸ். வி. இராமசாமி அவர்களை இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.”

இந்தத் தீர்மானத்தை ‘பகுத்தறிவு’ பத்திரிகை ஆசிரியர் தோழர் ப. கண்ணன் வழிமொழிந்தார். தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

சேலம் நகரசபை உறுப்பினர் தோழர் ஏ. மாரியப்பன் பேசுகையில், சிக்கனத்தை கடைபிடிக்கும் மந்திரிகள் முதலில் தங்கள் சம்பளங்களை மொத்தம் 1,000 ரூபாயாகக் குறைத்துக்கொள்ளவேண்டும் என்றும், எந்த அதிகாரிக்கும் குறைந்தது ரூ. 100—அதிகபட்சம் ரூ. 1,000 சம்பளம் நிர்ணயிக்கப்பட்டால் பணம் மீதமாகுமென்று குறிப்பிட்டார்.

தோழர் இ. ஆர். கிருஷ்ணன் பேசுகையில், ‘புது வரி விதிக்கவில்லை என்று கூறி, சென்னை நிதி அமைச்சர் மறைமுகமாக விற்பனை வரியை உயர்த்தியது மக்களை பாதிக்காதா?’ என்று கேட்டார். ‘உணவுப் பொருள்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்களிக்கவேண்டும்,’ என்று கோரினர்.

தோழர் சிற்றுளி ஏ. சுப்பிரமணியம் பேசுகையில், புதுவரிகளை மக்கள் எதிர்த்துக் கொண்டிருக்கும் பொழுது மக்களைப் பற்றி கவலைப்படாமல் நேரு வெளிநாட்டுக்கு சுற்றுப் பயணம் சென்றுவிட்டார் என்றும், 1937-ல் மதுவிலக்கினல் ஏற்படும் கஷ்டத்தை ஈடுகட்ட இராசகோபாலாச்சாரியார் கொண்டுவந்த விற்பனை வரித்தொல்லை ஆச்சாரியார் பதவியை விட்டு சென்றபோதிலும், நாளுக்கு நாள் அதிகரிக்கிறதே தவிர குறையவில்லையே என்றும் குறிப்பிட்டார்.

தோழர் டி. கே. சீனிவாசன் பேசுகையில் குறிப்பிட்டதாவது :

“புதிய வரிகளை எதிர்த்து நம் கழக தோழர்கள் மனு கொடுக்கச் செல்லும்போது 6-ந் தேதி இரவு வரை ஊரில் இருந்த பாராளுமன்ற காங்கிரஸ் உறுப்பினர் இன்று ஊரை விட்டுச் சென்றுவிட்டார் எனக் கேள்விப்பட வருந்துகிறேன். அந்த விண்ணப்பத்தின் நகல் ஒன்றை அவருக்கு ரிஜிஸ்தர் தபாலில் அனுப்புமாறு கழகத் தோழர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

“தேர்தலுக்கு முன்பு வரிகளைப் பற்றி ஒன்றும் சொல்லாது மக்களிடம் ‘ஓட்டு’ வாங்கிச் சென்ற காங்கிரஸ்காரர்கள், இப்பொழுது மக்களுக்கு ‘வேட்டு’ வைத்துவிட்டார்கள் (புது வரிகளை விதித்து விட்டார்கள்); புது வரிகள் விதிக்கப் போவதாக தேர்தலின்போது கூறியிருந்தால் காங்கிரஸ்காரர்களின் தேர்தல் முடிவே வேறுவிதமாக இருந்திருக்கும்” என்றும் குறிப்பிட்டு, வரி விதிப்புகளுக்குக் கண்டனம் தெரிவித்துப் பேசினர்.

ஏழுமலையானின் ஊதியம்

திருமலை, ஜூலை 10—

திருமலை ஏழுமலையான் ஜூன் திங்கள் வருமானம் கணக்கிடப்பட்டுள்ளது.

இந்திய நாணயங்கள் ரூ. 2,27,184—3—9 என்றும், ஐதாராபாத் நாணயங்கள் ரூ. 425—12—0 என்றும், ரூ. 689—1—0 தோலா எடை தங்கமும், 6,756 தோலா எடை வெள்ளியும், 821 பழைய ஜார்ஜ், இராணி வெள்ளி ரூபாய்களும், 16 முழு சவரன்களும் கிடைத்துள்ளன.

தென் மண்டலக் குழு: பண்டித பந்த் துவக்கி வைத்தார்

மைசூர் முதல்வரும் கலந்துகொண்டார்

சென்னை, ஜூலை 11—

சென்னை—ஆந்திரம்—கேரளம் அடங்கிய தென் மண்டலக் குழுவினை, இன்று டில்லி உள்நாட்டு மந்திரி பண்டித பந்த் துவக்கி வைத்திருக்கிறார்.

இந்த மூன்று மாநில முதல் மந்திரிகளையும் தவிர, மைசூர் மாநில முதன்மந்திரி எஸ். நிஜலிங்கப்பாவும் விசேட அழைப்பின் பேரில் கலந்துகொண்டிருக்கிறார்.

'பிரதேசத்திற்குப் பொதுவான பல பிரச்சினைகளையும் குறித்து இந்த மண்டலக் குழு விவாதித்துப் பரிகாரம் காண முடியும்' என்று பந்த் குறிப்பிட்டிருக்கிறார்.

"இந்த மண்டலக் குழு, தட்சிணப் பிரதேசம் அமைப்பதற்கான வழி வகுப்பதற்கல்ல; மாருக, இந்த மண்டலத்தின் பல பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்பதற்காகவேயாகும்" என்றும் பத்திரிகையாளரிடம் பண்டித பந்த் குறிப்பிட்டிருக்கிருர்.

ஆகாகான் மறைவு

ஜெனீவா, ஜூலை 11—

ஆகாகான் — சுல்தான் சர். முகம்மது ஷா தமது 79-வது வயதில் இன்று, இங்கு, இயற்கை யெய்தினர்.

அவரது மனைவியும், இரண்டு புதல்வர்களும் அவர் இறக்கும் தருவாயில் அருகிலிருந்திருக்கின்றனர்.

மூன்று வாரங்களுக்கு முன் தான் அவர் பாரிசிலிருந்து ஜெனீவா வந்து சேர்ந்தார். சில காலமாகவே அவர் நோய்வாய்ப் பட்டிருந்தார்.

முஸ்லிம்களில், இஸ்மாலி வகுப்பினரின் மதத் தலைவராகவும், முகம்மது நபியின் 48-வது நேரடி வாரிசு என்றும் ஆகாகான் போற்றப்பட்டவராவார்.

இவர், சுமார் 2 கோடி முஸ்லீம்களுக்குத் தலைவர். இந்த 2 கோடி முஸ்லீம்களும் இந்தியா, பாகிஸ்தான், ரஷ்யா, கிழக்கு ஆப்பிரிக்கா, அரேபியா ஆகிய நாடுகளில் பரவிக்கிடக்கின்றனர்.

'ஆகாகானின் ஆண்டு வருமானம் சுமார் 4,50,000 பவுன்' என்று ஒருமுறை கணக்கிடப்பட்டது. மேலும் அவரிடம் சுமார் 60 கோடி பவுன் முதல் உண்டு என்றும் கணக்கிடப்பட்டிருக்கிறது.

ஆகாகானின் சவம், எகிப்தில் அஸ்வானுக்கு எடுத்துச் செல்லப்படும் என்றும், அங்கு அவரே தேர்ந்தெடுத்திருந்த ஓரிடத்தில் சமாதி வைக்கப்படும் என்றும் தெரியவருகிறது.

ஆகாகான், 1877-ம் ஆண்டில், காராச்சியில் பிறந்தவர்; 10-வது வயதிலேயே இஸ்மாலி தலைவரானவர்; பெரும் செல்வந்தர்; மிதமான அரசியல்வாதியாக விளங்கியவர்.

ஆகாகான் பெரும் அளவில் தருமங்கள் செய்துள்ளார்; இந்தியாவில் பல மருத்துவ மனைகள், பள்ளிகள் போன்றவற்றை நிறுவியுள்ளார்.

பரமக்குடி தி. மு. கழகப் பொது உறுப்பினர்களுக்கு

14—7—57 மாலை 5 மணிக்கு கழகப் பணிமனையில் மேற்படி பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும்; அதுபோது, பல முக்கியப் பிரச்சினைகள் குறித்து ஆராயப்படும்.

பரமக்குடி வட்ட—உழவர் சங்க செயற்குழு உறுப்பினர்களுக்கு

14—7—57 மாலை 6 மணிக்கு பரமக்குடி தி. மு. கழகப் பணிமனையில் மேற்படி உழவர் சங்க செயற்குழுக் கூட்டம் நடைபெறும்; அதுபோது பல முக்கியப் பிரச்சினைகள் குறித்து ஆராயப்படும்.

சென்னை—தூளை தி. மு. க. செயற்குழு உறுபபினர்களுக்கு

13—7—57 இரவு 8 மணிக்கு மேற்படி கிளையின் செயற்குழுக் கூட்டம் கழகப் பணிமனையில் நடைபெறும்; ஆண்டறிக்கையும்-தீர்மானங்களும் ஆராயப்படும்.

★★★★★★★★★★★★★★★★★

சேலம், மதுரை வழக்கு நிதி

சிறப்புக் கூட்டம்

★

மதுரை பழனி டாக்கீசில்

14—7—57 காலை 9 மணிக்கு

தலைவர் :

பி. போதகுருசாமி

பேசுவோர் :

இரா. நெடுஞ்செழியன்

—'கவிஞனின் உள்ளம்'

கி. மனோகரன்

—'ஜனநாயகம்'

நன்கொடை : ரூ. 1, அணா 8.

—மதுரை நகர் தி மு. கழகம்

★★★★★★★★★★★★★★★★★★

குளித்தலை வட்ட விவசாயிகள்

கோரிக்கை தினம்

மாபெரும் ஊர்வலம் பொதுக்கூட்டம்

நியாயவாரச் சட்டத்தின் பயனை விவசாயிகள் அனுபவிக்கவும் அதற்கான முயற்சிகளை அரசாங்கம் உடனடியாகச் செய்ய வேண்டுமென்று வற்புறுத்தவும் 14—7—57 மாலை 6-மணிக்கு குளித்தலை வ. உ.சி. சதுக்கத்தில் மாபெரும் விவசாயிகள் பொதுக்கூட்டம் நடைபெறும்.

அதுபோது, தோழர்கள் மு. கருணாநிதி எம்.எல்.ஏ., அம்பில் தர்மலிங்கம், பொன்மலை பராங்குசம், குளித்தலை தி. வி. முத்து கிருஷ்ணன், கவண்டம்பட்டி க. முத்து ஆகியோர் பேசுவர்.

குறிப்பு:—அன்று மாலை 3-மணிக்கு, நங்கவரத்திலிருந்து தோழர்கள் தீ. வீ. முத்து கிருஷ்ணன், க. முத்து, சு. சண்முகம் ஆகியோர் தலைமையில் ஓர் மாபெரும் விவசாயிகள் ஊர்வலம் புறப்பட்டு பொய்யாமணி, பேட்டை வாய்த்தலை, வழியாக குளித்தலை வந்தடையும்.

மணவழகர் மன்றம் நக்கீரர் பட்டி மன்றம்

13—7—57 மாலை 6-30 மணிக்கு சென்னை — பெத்துநாய்க்கன்பேட்டை சிவஞானம் பூங்கா அருகில், முருகேச முதலித் தெரு 2-ம் எண்ணுள்ள மன்ற நிலையத்தில் மேற்படி பட்டி மன்றக் கூட்டம் தோழர் சி. சம்பந்தம் தலைமையில் நடைபெறும்; தோழர்கள் எஸ்.சங்கராசு, என். சுந்நாதன் ஆகியோர் பேசுவர்

குடந்தை நகர தி.மு. கழக செயற்குழு உறுப்பினர்களுக்கு:

14—7—57 காலை 10-மணிக்கு மேற்படி செயற்குழுக் கூட்டம், குடந்தை ஜெ. பி. கீழத்தெரு அண்ணா அரங்கில் (கே. கே. என். இல்லம்) நடைபெறும்; பல முக்கியப் பொருள்கள் ஆய்வுக்கு வரும்.

திண்டிவனத்தில் அண்ணா

அவர்களுக்குப்

பாராட்டுக் கூட்டம்

14—7—57 ஞாயிறன்று மாலை 6-மணிக்கு திண்டிவனம்—தீர்த்தக் குளக்கரை திடலில் தி. மு. கழகச் சார்பில் தோழர் தி. க. குமாரசாமி தலைமையில் **அண்ணா** அவர்களுக்குப் பாராட்டு வழங்கப்படும். தோழர் ஏ. கோவிந்தசாமி அவர்களும் கலந்து கொள்வார்.

பொதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன்

சுற்றுப்பயணம்

ஜூலை

13 : காலை—செங்காட்டுப்பட்டி
நண்பகல்—ஆத்தூர்
மாலை—திருச்சி

14 : காலை—மதுரை
மாலை—காரைக்குடி
இரவு—தேவகோட்டை

15 : மாலை 4 மணி—தொண்டி
,, 6 மணி—இராசசிங்க மங்கலம்
இரவு—இராமநாதபுரம்

16 : மாலை—புதுவலசை
இரவு—பரமக்குடி

17 : பகல்—அ. தெக்கூர்
மாலை—திருப்பத்தூர்
இரவு—காளாப்பூர்

18 : இரவு—ஜெயங்கொண்டம்

கழகக் கூட்டங்கள்

★

செங்கற்பட்டு:

தர்க்கா திடலில்

14—7—57 மாலை 6 மணிக்கு

தலைவர் :

சே. கோ. விசுவநாதன்

பேசுபவர் :

க. அன்பழகன் எம்.எல்.ஏ.

★

தச்சநல்லூர் :

(நெல்லை மாவட்டம்)

14—7—57 மாலை 6 மணிக்கு

தலைவர் :

டி. சேவந்தி பி.ஏ., எல்.எல்.பி

பேசுவோர்:

என். எஸ். இளங்கோ

எஸ். இரத்தினவேல்பாண்டியன் பி.ஏ., பி.எல்.

டபிள்யூ. டி. துரைசாமி

இன்னிசை :

ஜி. தேவராசன் குழுவினர்

திருப்பூர் நகர தி.மு. கழக செயற்குழு உறுப்பினர்களுக்கு

14—7—57 மாலை 5 மணிக்கு 'நகர வழிப்போக்கர் விடுதி'யில் மேற்படி செயற்குழு உறுப்பினர் கூட்டம் நடைபெறும்; அதுபோது வரவு—செலவு கணக்கு தணிக்கைப் பார்த்தல், கழக முக்கியப் பிரச்சினைகள் பற்றி ஆராயப்படும்.

வண்ணை-அண்ணா படிப்பகம் செயற்குழு உறுப்பினர்களுக்கு

13—7—57 இரவு 8 மணிக்கு படிப்பகப் பணிமனையில் செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும்; அதுபோது, பல முக்கியப் பிரச்சினைகள் பற்றி முடிவு எடுக்கப்படும்.

திருக்கோகர்ணத்தில் குமரவேல் நினைவுமன்ற ஆண்டுவிழா

14—7—57 மாலை 6-மணிக்கு திருக்கோகர்ணம் - சத்தியமூர்த்தி திடலில், தோழர் கோ. சீனிவாசன் தலைமையில் மேற்படி மன்ற 3-ம் ஆண்டுவிழா நடைபெறும்; துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள், தோழர் த. பா. செழியன் மற்றும் பலர் சொற்பொழிவாற்றுவர்.

அன்று காலை 9-மணிக்கு நமண சமுத்திரத்தில் தி. மு. கழகச் சார்பில் துணைப் பொதுச்செயலாளர் அவர்களுக்கு வரவேற்பு அளிக்கப்படும்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

எழும்பூர் தொகுதி தேர்தல் வழக்கு நிதி

சிறப்புக் கூட்டம்

★

சென்னை - கோகலே மண்டபத்தில்

13—7—57 சனிக்கிழமை மாலை 6-மணிக்கு

★

தலைவர் :

ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ.

பேச்சாளர்கள் :

அண்ணா

க. அன்பழகன், மு. கருணாநிதி

மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் பலர் பேசுவர்.

பொருள்: **'வரவும் - செலவும்'**

கட்டணம்: ரூ. 1, அணா 8.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

சட்டசபையில் கழக உறுப்பினர்கள் கோரிக்கை

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கு வேறு வழியில் வாழத் தெரியாது. அவர்கள் காட்டுப் பகுதிகளில் விவசாயம் செய்வதைத் தடுக்கவேண்டாம் என்று கேட்டுக்கொள்வதுடன், அவர்களுக்கு வேறு வழிகளில் வாழ வழிசெய்து தரவும் அரசாங்கம் முனையவேண்டும் என்று கூறுகிறேன்.

"சேலம் மாவட்டத்தில் மிகவும் அவசியமான பொருள்களில் ஒன்ருகிய கடுக்காய் மரம் விளையக்கூடிய சாத்தியக் கூறுகள் உள்ளன; இதற்காக அரசாங்கம் அக்கறை எடுத்துக்கொண்டு அம்மரத்தைப் பயிரிடுவதற்கு ஆவன செய்ய வேண்டுகிறேன்."

★

தோழர் எம். செல்வராஜ் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"ஒருபுறம் மரங்களை வெட்டிக்கொண்டும், மற்ருெரு புறம் மரங்களை நடுவதற்காக 'வனமகோத்சவம்' என்று கொண்டாடுவதும் வேடிக்கையாக உள்ளது.

'வனமகோத்சவம்' என்ற பெயரால் பணம் பாழாகிறது; இதுவரை நட்ட மரங்கள் என்ன ஆயிற்று என்பதைப்பற்றி ஒன்றுமே தெரியவில்லை.

"விருத்தாசலம் தொகுதியில் உள்ள காட்டுப் பகுதியைக் குடியமர்த்துவதற்காக எடுத்துக்கொண்டு, பிறகு கைவிட்டுவிட்டனர். இந்தக் காட்டுப் பகுதியை நல்ல முறையில் பயன்படுத்த முந்திரி பயிரிடலாம் என்று யோசனைகூற விரும்புகிறேன்.

'கள்ளத்தனமாகக் காட்டில் மரங்கள் வெட்டப்படுவதை தடுப்பதற்காக 'நடமாடும் குழாம்' எங்கள் பகுதியில் சரியாக வேலை செய்வதில்லை.

"தலைமைக் காட்டு இலாகாவின் அலுவலகத்தை சேப்பாக்கத்திலிருந்து மாற்றி அதிக வாடகையில் பீட்டர் சாலையில் புதிய இடம் பெற்றிருப்பது அவசியமில்லாதது; 'சிக்கனம், சிக்கனம்' என்று பேசப்படும் இந்த நேரத்தில் இம்மாற்றம் மிகவும் தவருனதாகும்."

★

தோழர் எஸ். எம். அண்ணாமலை அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"மலைசாதி மக்களைப் பற்றி நான் வரவு-செலவுத் திட்ட விவாதத்திலே குறிப்பிட்டேன்; இப்போதும் குறிப்பிட விரும்புகிறேன்.

"1954-ல், அவர்கள் ஒரு மகஜர் தயாரித்து தங்கள் குறைகளை அமைச்சருக்குத் தெரிவித்தனர். அதைப் பற்றி அரசாங்கம் கவனிக்கவில்லை. எதிர்காலத்தில் அவர்கள் பல முறை தூது வருவார்கள்; அவர்கள் குறைகளைக் கவனிக்க வேண்டுகிறேன்.

"கிராமங்களில் வாழும் ஏழைகளுக்குக் காட்டில் உள்ள நிலங்களில் பயிரிட அனுமதியளிக்க வேண்டும். இதுவரை விவசாயம் செய்து வந்தவர்கள்மீது நடவடிக்கை எடுத்துத் தடுத்துவிட்ட காரணத்தால் பலர் வேலையில்லாமல்—வாழ வழியில்லாமல் கஷ்டப்படுகின்றனர்.

"மேலும், வெள்ளாடு மேய்வதற்கு வரி வசூலிக்கப்படுகிறது; இது கூடாது; அந்த வரியை ரத்து செய்யவேண்டும்.

"சாதாரண ஏழைகள் தலை மீது சுமந்து செல்லும் கட்டைக்கு 'ரதாரி' வரி வசூலிப்பதையும் கைவிட வேண்டும்.

"பேரூருக்கும்— ஆரணிக்கும் இடையே உள்ள நெடுஞ்சாலை ஓரமாக 6,000 மரங்களை நட்டார்கள். அந்த மரங்கள் தீப்பெட்டி செய்வதற்குப் பயன்படும் என்றும் கூறினர்கள். திட்டக் குழுவை பிறகு விசாரித்தபோது எத்தனை மரங்கள் உயிரோடு இருக்கின்றன என்று கூறமுடியவில்லை. ஏன் இந்த நிலை? எவ்வளவு பணம் வீணுக்கப்படுகிறது?

கம்யூனிஸ்டு நாடு........

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

படுத்தி, அழித்துவிட எல்லா முயற்சிகளையும் செய்கிருர்கள்.

'இன்று சமாதானத்திற்கு உறுதியளிக்கக் கூடியதாயிருக்கும் கம்யூனிஸ்டு முகாமின் ஒற்றுமையைக்குலைக்க எவரையும் நாம் அனுமதிக்கப் போவதில்லை நமக்கிருக்கும் பலத்தால், நாம் எந்த ஒரு எதிரிக்கும் பயப்படுகிறவர்களாயில்லை" என்று, ரஷ்ய கம்யூனிஸ்டு செயலாளர் குருஷ்சேவ் செக்கோஸ்லவேக்கியாவின் தலைநகர் வந்தடைந்ததும் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிருர்.

மதுரை—இளங்கோ மன்றம் 5-ம் ஆண்டு நிறைவு விழா

14—7—57 மாலை 6-மணிக்கு மதுரை பாண்டிய வேளாளர் தெருவில், மேற்படி விழா தோழர் மு. சந்தானம் தலைமையில் நடைபெறும்; தோழர் மு. விவேகானந்தன் கொடியேற்றுவார். தோழர்கள் காஞ்சில் கி. மனோகரன், எஸ். முத்து ஆகியோர் சிறப்புரை நிகழ்த்துவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : இரா நெடுஞ்செழியன் எம்.ஏ